# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம்

**(தமிழ்நாடு சட்ட எண் 48/2008)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Medicare Service Persons and Medicare Service Institutions (Prevention of Violence and Damage or Loss to Property) Act, 2008

**(Tamil Nadu Act No. 48 of 2008)**

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

**2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம்**

(தமிழ்நாடு சட்ட எண் 48/2008)

பிரிவு பொருளடக்கம்


1. குறுந்தலைப்பும் தொடக்கமும்.
2. பொருள்வரையறைகள்.
3. வன்முறைகளைச் செய்வதற்கான தண்டனை.
4. குற்றச்செயலை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளுதல்.
5. சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கான அல்லது இழப்பிற்கான இழப்பீட்டினைச் செலுத்துவதற்கானக் கடப்பாடு.
6. ஒரு சில நடவடிக்கைகளுக்குத் தடை.
7. பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுதல் ஆகாது.
8. நீக்கமும் காப்பும்.

# 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 48/2008)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2008ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத் தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துகளுக்குச் சேதம் அல்லது இழப்பினை ஏற்படுத்துவதைத் தடுப்பதற்கும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய மற்றும் இடைவிளைவான பிற விபரங்களுக்கு வகை செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இம்மாநிலத்தில் மருத்துவச் சேவை என்பதான பணிகளுக்கு முழுமையான அளவில் இடையூறு ஏற்படும் விளைவை உண்டாக்குகிற வகையில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு இடையே பதற்றத்தை உருவாக்கி, மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களின் வாழ்க்கைக்கு ஊறு அல்லது அபாயம் விளைவிக்கின்ற மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் சொத்துகளுக்குச் சேதத்தை அல்லது இழப்பை ஏற்படுத்துகின்ற வன்முறைச் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்பதாலும்;

மேலும், பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய மற்றும் பிணையில் விடாக் குற்றமாக அக்குற்றத்தை ஆக்குவதன் மூலம், வன்முறை செய்கின்ற நபர்களைத் தண்டிப்பதும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள

நிறுவனங்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு அல்லது இழப்பிற்கு, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டிய இழப்பீட்டினை வழங்குவதும் தேவையானதாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:–

1. **குறுந்தலைப்பும் தொடக்கமும்.**– (1) இந்தச் சட்டம், 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, 2008ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**– இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(1) "மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம்" என்பது, நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கிற மற்றும் அவர்களை அனுமதிப்பதற்கு அல்லது தங்குவதற்கான வசதிகளைக் கொண்டிருக்கிற தனியார் மருத்துவமனை எதுவும் உள்ளடங்கலான, மாநில அல்லது மைய அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற, மக்களுக்கு மருத்துவப் பாதுகாப்பினை வழங்குகிற நிறுவனம் எதுவும் எனவும், குழந்தை பிறப்பது தொடர்பான பிரசவம் மற்றும் பிரசவத்திற்கு முன்னர் மற்றும் பிரசவத்திற்குப் பின்னர் கொடுக்கப்படவேண்டிய மருத்துவப் பாதுகாப்பு நோக்கத்திற்காக, வழக்கமாக பெண்கள் அனுமதிக்கப்பட்டு இடமளிக்கப்படுகிற அல்லது

அதனோடு தொடர்புடைய பிற எதற்குமான தனியார் மகப்பேறு இல்லம் என்றும் மற்றும் உடல் தொடர்பான அல்லது மனம் தொடர்பான நோய், காயம் அல்லது நலிவு எதனாலும் பாதிக்கப்பட்ட நபர்களை ஏற்று இடமளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதப்படும் மற்றும் நோயாளிகளைப் பேணிக்காத்து சிகிச்சை வழங்குவதற்கான அல்லது இவ்விரண்டையும் செய்கின்ற தனியார் செவிலியர் இல்லம் எதுவும் எனப் பொருள்படும்; மற்றும் அது மகப்பேறு இல்லம் அல்லது நோயாளிகள் நல இல்லம் ஒன்றை உள்ளடக்கும்.

(2) மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்று தொடர்பாக, "மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்" என்பது, அத்தகைய மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டு பணியாற்றுகிற,—

(a) (தற்காலிகப் பதிவு பெற்றுள்ள நபர் ஒருவர் உள்ளடங்கலான) பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்களையும்;

(b) பதிவுபெற்ற செவிலியர்களையும்;

(c) மருத்துவ மாணவர்களையும்;

(d) செவிலியர் மாணவர்களையும்;

(e) துணை மருத்துவப் பணியாளர்களையும், உள்ளடக்கும்.

(3) "சொத்து" என்பது, மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர் ஒருவரால் அல்லது மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனம் ஒன்றினால் சொந்தமாக வைத்து வரப்படும் அல்லது அனுபோகத்தில் வைத்து வரப்படும் அல்லது கட்டுப்பாட்டில் வைத்து வரப்படும் அசையும் அல்லது அசையாச்சொத்து அல்லது

மருத்துவக் கருவி அல்லது மருத்துவ இயந்திர சாதனம் எதுவும் எனப் பொருள்படும்.

(4) "வன்முறை" என்பது, மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தில் தமது பணியை ஆற்றுகையில் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர் எவருக்கும் ஊறு, காயம் அல்லது உயிருக்கு அபாயம் அல்லது அச்சுறுத்தல் அல்லது தடை அல்லது இடைஞ்சல் விளைவிக்கிற அல்லது சொத்துக்கு இழப்பு அல்லது சேதம் விளைவிக்கிற செயற்பாடுகள் எனப் பொருள்படும்.

3. **வன்முறைகளைச் செய்வதற்கான தண்டனை.**– தாமாகவோ அல்லது நபர்களின் குழு அல்லது நிறுவனம் ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவோ அல்லது தலைவர் ஒருவராகவோ, வன்முறைச் செயல்பாடு எதனையும் செய்கிற அல்லது செய்வதற்கு முயற்சி செய்கிற அல்லது அதனைச் செய்வதற்கு உதவி செய்கிற அல்லது அதனைத் தூண்டிவிடுகிற நபர் எவரும், மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படக்கூடிய காலஅளவுக்கான சிறைத்தண்டனையுடன் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

4. **குற்றச்செயலை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளுதல்.**– பிரிவு 3இன்படி செய்யப்பட்ட குற்றச்செயல் எதுவும், பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றமாகவும் பிணையில்விடாக் குற்றமாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கான அல்லது இழப்பிற்கான இழப்பீட்டினைச் செலுத்துவதற்கான கடப்பாடு.**– (1) பிரிவு 3இல் குறிப்பிடப்பட்ட தண்டனைக்கும் கூடுதலாக சொத்துக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்கான அல்லது இழப்பிற்கான இழப்பீட்டினை

நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டபடி செலுத்துவதற்கு அந்த நபர் கடமைப்பட்டவராதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படியான இழப்பீட்டினை அந்நபர் செலுத்தவில்லையானால், மேற்சொன்ன தொகையானது, 1864ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் II/1864) வகைமுறைகளின்கீழ், ஒரு நில வருவாய் நிலுவையைப் போலக் கருதப்பட்டு, வசூலிக்கப்படுதல் வேண்டும்.

6. **ஒரு சில நடவடிக்கைகளுக்குத் தடை.**– மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபரால் அல்லது மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினால், 1992ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து (சேதம் மற்றும் இழப்பினைத் தடுத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 59/1992) கீழ், அதிகாரஅமைப்பு எதன் முன்பும் சொத்துக்கு ஏற்பட்ட சேதம் அல்லது இழப்பிற்கான இழப்பீட்டுக் கோரிக்கை எதுவும் செய்யப்படுதல் கூடாது.

7. **பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படுதல் கூடாது.**– இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளவாறு அல்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருக்கவேண்டுமேயன்றி, அதற்கு ஊறு விளைவிப்பதாக இருத்தல் கூடாது.

8. **நீக்கமும் காப்பும்.**– (1) 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல் அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச்சட்டம் 3/2008) இதன் மூலம் நீக்கப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கப்பட்டு இருக்கின்றபோதும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல்

எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டு இருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கருதப்படுதல் வேண்டும்.